මහජන බැංකුව | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்

**கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுப் பொருட்களை**

***வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது.***

| கேள்விப்பத்திர இலக்கம் | பொருள் பற்றிய விபரம் | அளவு | விலை கூறல் பிணைப்பொறுப்பு முறியின் பெறுமதி (ரூ) | கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இறுதி திகதி | கேள்விப்பத்திரம் மூடப்படும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| P/032/2024 | Pasal Loka Sithiyam Potha / School World Atlas with suitable value additions. | 40,000 | 660,000/- | 2024.06.04ஆம் திகதி பி.ப.2.00 மணி | 2024.06.05ஆம் திகதி பி.ப. 2.00 மணி |
| P/033/2024 | Grade 5 Scholarship Medals | 48,000 | 576,000/- | | |

**ஏனைய நிபந்தனைகள்**

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை **2024.05.15ஆம் திகதி முதல் 2024.06.04ஆம் திகதி வரை** மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள படி வாரத்தில் வேலை நாட்களில் **முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை** இலக்கம் 30/101, கிவ் வீதி, கொழும்பு 02இல் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்காக **ரூ.5,000/-** மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்புத் தொகையொன்றைச் செலுத்த வேண்டும். கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்காக குறித்த நிறுவனத்தின் விண்ணப்ப கடிதத்தையும் இத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒழுங்காகத் தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களுடன் மேலே அட்டவணையில் குறிப்பிட்ட பெறுமதிக்கு விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியொன்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து (மக்கள் வங்கியைத் தவிர்த்து) பெற்று சமர்ப்பிக்க வேண்டும். அது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருக்க வேண்டும். இதற்காக 180 நாட்களுக்குச் செல்லுபடியான வங்கி கொடுப்பனவு கட்டளையொன்றை அல்லது வங்கி வரைவொன்றைச் சமர்ப்பிக்க முடியும். தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ள்ப்பட மாட்டாது. மக்கள் வங்கியின் எந்தவொரு விதத்திலான கணக்கொன்றில் பண வடிவில் உள்ள வைப்புத் தொகை மற்றும் அதற்கு உரியதாக எதிரீடு செய்யும் கடிதமாக இருந்தாலும் பிணைப்பொறுப்பு முறியாக ஏற்றுக்கொள்ள முடியும்.

3. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை மக்கள் வங்கி வழங்கல் திணைக்களம் இலக்கம் 30/101, கிவ் வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். இன்றேல் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிட்ட திகதியன்று பி.ப.2.00 மணிக்கு கேள்விப்பத்திரம் மூடப்படுவதோடு, அன்றைய தினம் பி.ப.2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படாமலே மீள ஒப்படைக்கப்படும்.

4. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு. ஆகக் குறைந்த விலையை ஏற்றுக்கொள்ள வங்கி கட்டுப்பட்டிருக்கவில்லை.

5. இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதம முகாமையாளர், மக்கள் வங்கி, வழங்கல் திணைக்களம் அவர்களிடமிருந்து பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதம முகாமையாளர் (வழங்கல்)**
**மக்கள் வங்கி,**
**வழங்கல் திணைக்களம்,**
**30/101, கியு வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம் : 2439577, 2439578**
**தொலைநகல் இலக்கம் : 2439576**
**இணையத்தளம் :** www.peoplesbank.lk
**மின்னஞ்சல் :** supplies@peoplesban